**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 30.09.2019 ((முற்பகல்)**
**மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சிவகங்கை மாவட்டம்.**

**முன்னிலை**
**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**
**•••••••••**

**வழக்கு எண்.SA 1987/E/2017**

திரு பூ.சதுரகிரி ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் வளாகம்,
சிவகங்கை. ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 30.12.2016 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 07.02.2017 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 13.03.2017 |

******

**ஆணை**

இன்று (30.09.2019) முற்பகலில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு பூ.சதுரகிரி ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திரு கி.கருணாகரன், வருவாய்

கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், சிவகங்கை மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 30.12.2016 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கனிமம் மற்றும் சுரங்கம், சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், தெ.புதுக்கோட்டை கிராமம் புல எண்.259, விஸ்தீரணம் 2.43.0 ஹெக்டேரில் தென்னவராயன் கண்மாய் நீர்ப்பிடிப்புப் பகுதியில் தனிநபர் ஆக்கிரமிப்பு செய்து அரசு அனுமதியின்றி செங்கல் காளவாசகல் நடத்தி மணல் அள்ளியது தொடர்பாக அபராதம் விதித்தது தொடர்பாக, 20.08.2015 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ந.க.எம்2/196/2015-ன்படி வருவாய் கோட்டாட்சியர், சிவகங்கை அவர்களுக்குக் கடிதம் அனுப்பி அறிக்கை கேட்டுள்ளது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்த விபரம், 3681 கணமீட்டர் அல்லது 409 டிப்பர்லோடு சவடு மண்ணை அரசு அனுமதியின்றி சேமித்து வைக்கப்பட்டதாகவும் அதற்குரிய 1959-ஆம் வருடத்திய சிறுகனிம சலுகை வழி எண்.36(A)-ன்படி அபராதம் விதித்துள்ள விபரம் என 2 இனங்களில் தகவல் கோரி, பொதுத் தகவல் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், சிவகங்கை மாவட்டம் என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 07.02.2017 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், சிவகங்கை அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். அதன் பின்னரும் பொது அதிகார அமைப்பினரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க உத்திரவிடுமாறும், தகவல் வழங்காத பொது அதிகார அமைப்பினர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 13.03.2017 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (30.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகி, தான் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவிற்குப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்படாததால், சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவும், சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவும் தாக்கல் செய்துள்ளதாகவும், இதுநாள்வரைப் பொது அதிகார அமைப்பினரால் முழுமையான தகவல் தனக்கு வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை முழுமையாக வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் தனது வாதுரையை ஆணையத்தின் முன்பு எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளருக்கு ஏற்கெனவே 12.01.2017 மற்றும் 03.03.2017 ஆகிய

தேதியிட்ட கடிதங்கள் வாயிலாகத் தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும், மீண்டும் 24.09.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக இன்றைய தேதியில் உரிய தகவல் மேல்முறையீட்டாளருக்கு நேரில் சார்வு செய்யப்பட்டதாகவும் தெரிவித்து உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தால். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

6. பொதுத் தகவல் அலுவலரால் ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்யப்பட்ட அவணங்களைப் பரிசீலனை செய்கையில், மேல்முறையீட்டாளர் "**தேவையான அனைத்து தகவல்கள் இதன் மூலம் பெற்றுக்கொண்டேன்**" என எழுதிக் கையொப்பமிட்டுள்ளது தெரிய வருகிறது. மேல்முறையீட்டாளருக்கு உரிய தகவல் வழங்கப்பட்டுள்ளதென்பதை ஆணையம் பதிவு செய்து, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்.SA 1987/E/2017**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் வளாகம்,
சிவகங்கை.

**மனுதாரர்**

திரு பூ.சதுரகிரி,
த/பெ. பூமிநாதன்,
தெ. புதுக்கோட்டை,
மானாமதுரை வட்டம்,
சிவகங்கை மாவட்டம்.

Copy to: Judgement File.
04/10/19